## தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 12 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த

வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 வருமானக் குறியீடு – 2003.04.00 அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தொடர்பிலான ஆரம்ப கொடுப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில் கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக மோட்டார் சைக்கிள்களுக்கான முற்பணம், வரியற்ற வருமானமாக திணைக்களத்தினால் மேற்கூறிய வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட அனைத்து மோட்டார் சைக்கிள்களும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் குறித்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட உரித்துக்கு சான்றிதழ் செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எவ்வாறான போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ஆரம்ப கொடுப்பனவாக ரூபா 2,910,000 ஆன தேறிய வருமானம் 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் குறித்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்ட போது அதற்குரிய முறையான அறிவுரைகளை வழங்கி கணக்கு வைத்தல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய ஆரம்பக் கொடுப்பனவு மாவட்ட செயலாளர் / நிறுவனத் தலைவர்களினால் சேகரிக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு தனியாக வருமானக் குறியீடொன்று 2003.04.00 அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் அத்தொகையினை உரிய நிறுவனங்களினால் சரியான முறையில் கணக்கு வைத்தல் சரியாக கணக்கு பதிவுகளை மேற்கொள்ளல் காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது இந்த வருமான தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டினுள் அந்த இணக்கப்பாடுகள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவு என்பதால் உரிய முறையில் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களை மேற்கொண்டு வருமானத்தை கணக்கு வைத்தல் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு விளைவற்றிருந்தமை** | | |
| 2 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,100,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எதுவித பயன்பாடும் மேற் கொள்ளாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதியேற்பாடு எஞ்சியமைக்கு கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயணங்களில் ஈடுபடாமை மற்றும் வீட்டிலிருந்தவாறே வேலை செய்தமை காரணமாக இயந்திரங்களின் பயன்பாடு குறைவடைந்தமை மற்றும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் செயல்முன்னேற்றம் குறைவடைந்தமை அல்லது நடைமுறைப் படுத்தப்படாமை காரணமாக அமைந்துள்ளது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியானதும் நடைமுறைக்கு சாத்தியமானதுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை** | | |
| மீளாய்வாண்டில் 7 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த மையால் அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தேறிய நிதியேற்பாட்டின் 27 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் 2021.08.30 ஆந் திகதிய அமப/21/1596/304/134 ஆம் இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையின் அடிப்படையில் இந்த நிதியேற்பாடு எஞ்சியுள்ளமை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியானதும் நடைமுறைக்கு சாத்தியமானதுமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 03 ஆந் திகதி 60 வருடங்களை பூர்த்தி செய்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 151,360 ஆன கடன் மீதி 2022 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த உத்தியோகத்தருக்கு உரிய ஓய்வூதிய பணிக்கொடைத் தொகை ஓய்வூதிய திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிராததுடன் அந்த தொகையை செலுத்தும் போது நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அந்த தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 2020 செப்தெம்பர் 18 மற்றும் 2021 பெப்ரவரி 16 ஆந் திகதிகளில் மரணமடைந்த இரு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய முறையே ரூபா 102,499 மற்றும் ரூபா 101,561 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வில்லை. | மரணமடைந்த உத்தியோகத்தரின் குறித்த கடன் தொகை தொடர்பில் நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் அறிவுரை கோரப்பட்டுள்ளது. மரணமடைந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியில் இதுவரையிலும் சுமார் 85 சதவீதம் வரையான அளவினை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிதியமைச்சு சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2015 செப்தெம்பர் 23 ஆந் திகதி கடமைக்கு அறிக்கையிடாத காரணத்தினால் சேவையை கைவிட்டுச் சென்றிருந்த உத்தியோகத்தர் | இந்த உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவிடுவது தொடர்ந்தும் பிரச்சினைக்குரியதாக இருந்தமையால் அந்தக் கடன் மீதியை | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அல்லது அவ்வாறு அறவிட முடியவில்லை |

| | | |
|---|---|---|
| ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 150,119 ஆன கடன் மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய தவறியிருந்தது. | பதிவழிப்பதற்கு மேலதிக பணிகள் இடம்பெற்றவாறு உள்ளன. | எனின் அக்கடன் மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**2.4 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் மாதத்திற்காக ரூபா 4,500 ஆன செலவினம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் மாதத்திற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,500 தொகை 2022 ஆம் ஆண்டின் கடப்பாடொன்றாக தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | எதிர்வரும் வருடங்களில் தீர்ப்பனவு செய்யும் எதிர்பார்ப்புடன் ஏற்படுத்தப் பட்டிருந்த பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்புகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 395(ஏ) | சேகரிக்கப்படும் பணம் வங்கியில் வைப்புச் செய்தல், காசோலை வரைதல் அல்லது காசுப் புத்தகத்தை பேணுவதற்கு எதுவித தொடர்பும் இல்லாதிருந்த உத்தியோகத்தர் ஒருவரால் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் காசோலை வரையும் உத்தியோகத் தராலேயே வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ளவாறு உத்தியோகத்தர் களுக்கிடையில் வேலைகள் பரீட்சிக்கப்படும் வகையில் கடமைகளை சாட்டுவதற்குரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 30 ஆந் திகதிய SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதி ரூபா 32,732,054 ஆன மறைப் பெறுமதியாக காணப்பட்டது. திருத்தப்பட்ட ACA-7 மாதிரியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரமும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 32,732,054 ஆன மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. எனினும் கட்டுநிதி சீராக்கல் மீதி நேர் (+) ரூபா 32,732,054 ஆக காணப்பட வேண்டிய போதிலும் அது மறைப் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதி மீதியானது 0 ஆக காண்பித்தல் தர்க்க ரீதியில் இடம்பெற்றிருக்க வில்லையென்பது அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுரைகளுக் கமைய உரிய முறையில் இறுதி கணக்குகள் ஊடாக கட்டுநிதி மீதி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் நடைமுறைக்கு பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட வேண்டியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 அரச முற்பணப் பணிகளுக்குரிய எல்லைகள் பின்பற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 3 ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சு மற்றும் மாவட்ட | நிதிப்பிரமாணம் 503(2) ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய எல்லைகளினுள் செயற்பட்டு எல்லைகளின் மீறல்கள் / விஞ்சுதல்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு | ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளு மன்றத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | செயலகத்திற்காக முறையே ரூபா 32,000,000 மற்றும் ரூபா 17,000,000 படியாக ஆகக்கூடிய செலவின எல்லைகள் விதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த அமைச்சு மற்றும் அலுவலகத்தினால் குறித்த எல்லைகள் முறையே ரூபா 1,401,679 இனால் மற்றும் ரூபா 208,590 இனால் விஞ்சி முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பொறுப்பு அந்தந்த திணைக்களத்தின் தலைவர்களுக்கு சாட்டப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் தடுக்க முடியாத சில காரணங்கள் காரணமாக விஞ்சுதல்கள் / வீழ்ச்சிகள் ஏற்படுவதற்கு முன்னர் அதற்கான அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு உரிய விண்ணப்பம் குறித்த நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கட்டாயமாக திறைசேரிக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதாக இதன் போது விசேடமாக குறிப்பிடபப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிக்கப்பட்டுள்ள எல்லைகள் உரிய முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |
| (ii) | 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டோலையில் இரு ஆணைக்குழுக்களுக்காக முற்பணக் கணக்கின் ஆகக்குறைந்த எல்லைகளாக முறையே 500,000 மற்றும் ரூபா 200,000 ஆன எல்லைகள் விதிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது அந்த ஆணைக்குழுக்கள் செயற்படாமையால் பெறுவனவுகள் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. அதற்கமைய அந்த ஆணைக்குழுக்களினால் ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்க வில்லை. | இந்த 2 நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இரத்தாகியிருந்தமையால் இந்த எல்லைகளுக்கான உள்ளபடியான பெறுமதிகள் அறிக்கையிடப் பட்டிருக்காததுடன் செயலிழந்த நிறுவனங்கள் என்பதால் எல்லைகளை திருத்தியமைப்பதற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | ஒதுக்கீட்டு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக் கமைய செயற்பட்டு எல்லைகளை திருத்தி யமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.1.2 பொது முயற்சிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் 117 பொது முயற்சிகளுக்குரிய எதுவித பணிகளும் வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு அல்லது செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்படாததுடன் அந்த கண்காணிப்புக்களை மேற்கொண்டமைக்குரிய எதுவித தகவல்களும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் அந்த நிறுவனங்களின் நிதி ஈட்டத்திற்காக மற்றும் ஏனைய விசேடமான சந்தர்ப்பங்களில் அவற்றின் செயற்பாடுகளில் தலையீட்டினை மேற்கொள்ளும். மேலும் அந்த அரச நிறுவனங்களின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பில் இந்த திணைக்களம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவற்றை உள்ளடக்கியிராததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது இந்த கண்காணிப்பு பணிகளை உள்ளடக்குவதற்கு இயலுமான முறையில் நடவடிக்கை எடுப்பதற்கும் குறித்துக் கொள்கின்றேன்.<br><br>எவ்வாறான போதிலும் 2022 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்து அரச நிறுவனங்களும் அவர்களின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனரா என்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்தின் நேரடி கண்காணிப்பு மேற்கொள்ளல் முதற்கட்டமாக அதன் போது இந்த கண்காணிக்கப்படும் நிறுவனங்களை தாபித்தமைக்கான | திணைக்களத்தின் விடயப் பரப்பில் உள்ளடங்கும் நிறுவனங்களின் கண்காணிப்பு பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை |

| | | |
|---|---|---|
| | நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பிலான செயல்முன்னேற்றம் அவதானிக்கப்பட்டு அவற்றுக்குரிய வழிகாட்டல்கள் வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். | |

### 3.1.3 தேசிய வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் 2021-2023 அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் மூலதன செலவின மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அந்த முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 2021 ஆண்டின் வரவு செலவுத் திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் 2021 சனவரி 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தமையால் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மூலதன செலவின மதிப்பீடுகளை மேற்கொள்ளல் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. | அரச முதலீட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது உரிய இடைக்காலத்தினுள் நடைமுறைப்படுத்து வதற்காக தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரை / அங்கீகாரம் பெற்றுள்ள செயற்திட்டங்கள் அரச முதலீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுவதாக கருதப்படும். | மூலதன செலவின மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ள வேண்டியமையால் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்னர் அரச முதலீட்டு வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. |

### 3.1.4 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி தொழிலை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி தனது தொழிலை இழந்த நிரந்தர வாழ்வாரமொன்று இல்லாத 65 வயதினை பூர்த்தி செய்த நபர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட | 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பததில் 1980 யூலை பணிப்பகிஷ்கரிப்பினால் தொழிலை இழந்த நிரந்தர வாழ்வாதாரமற்ற | வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் எதிர்பார்த்த நோக்கங்களை உரிய முறையில் அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்மொழிவினை சமர்ப்பிக்கும் போது சரியான நலனாளிகளை இனங்காணாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுமார் 10,000 எண்ணிக்கையான நபர்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளமை கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் 1980 ஆம் ஆண்டு தொழிலை இழந்த யூலை பணிப் பகிஷ்கரிப்பாளர்களுக்கு செலுத்தப்படும் படியினை ரூபா 5,000 இல் இருந்து ரூபா 6,000 வரை அதிகரிப்பதற்கும், குறித்த நலனைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய வயதெல்லையை 63 வயது வரை குறைப்பதற்கும் அந்த ஊழியர்களின் தபுதாரர்களுக்கு அல்லது விதவைகளுக்கு இந்த கொடுப்பனவை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த கொடுப்பனவை ரூபா 5,000 இல் இருந்து ரூபா 6,000 வரை அதிகரித்திருந்த போதிலும் அதற்குரிய வயதெல்லை 63 வயது வரை குறைததல் மற்றும் குறித்த நலனாளிகளின் கணவன் அல்லது மனைவிக்கு அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வயதெல்லையை 63 வயது வரை குறைப்பதற்கும் விதவைகள் அல்லது தபுதாரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்குரிய கொள்கைரீதியான கொடுப்பனவு எடுக்கப்பட்டிராமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய முறையான கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2015 ஆம் ஆண்டின் போது முன்மொழியப்பட்ட விதவைகளுக்கான நட்டஈடு செலுத்துதல் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் 1980 யூலை வேலை நிறுத்தம் காரணமாக தொழில்வாய்ப்பை இழந்த தமது குடும்பத்தினை பராமரிப்பதற்கு முடியாதிருந்த காரணத்தால் தற்கொலை செய்து கொண்ட 138 ஊழியர்களுக்கு மாத்திரம் என்பதுடன் அவர்களுக்கு 2022 மே 31 ஆந் திகதி | 2013 ஆம் ஆண்டளவில் வாழ்வதாக கருதப்பட்ட நிரந்தர வாழ்வாதாரம் இல்லாதிருந்த யூலை பணிப்பகிஷ்கரிப்பாளர் களுக்காக மாத்திரம் தமது பொருளாதார அசௌகரியங்களிலிருந்து மீண்டெழுவதற்காக நிவாணமொன்றாக இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. தற்கொலை செய்து கொண்ட நபர்கள் தொடர்பில் நடவடிக்கை | வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| வரையிலும் எதுவித நிவாரணமும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | எடுப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

### 3.1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அரச நிறுவனங்களுக்காக நிதி குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,229,677,479 கூட்டுத்தொகையான வாகனங்கள் சுவீகரிக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவித்திருந்த போதிலும் அந்த சுவீகரிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டமைக்கான சான்றுப்படுத்தும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 150 இன் பிரகாரம் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு பல்வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை தவணைகள் செலுத்தி நிறைவு செய்யப்பட்ட வாகனங்களின் உரித்து குறித்த நிறுவனங்களுக்கு சுவீகரிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அந்த அரச நிறுவனங்கள் மற்றும் உரிய இலங்கை வங்கி கிளைகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்த பின்னர் அந்த வாகனங்களின் பெறுமதி இந்த திணைக்களத்தின் சொத்துக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்குத்தகை வாகனங்களின் உரித்தை உரிய நிறுவனங்களுக்கு சுவீகரித்து நிறைவு செய்யப் பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2014 யூலை 23 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரித்தானது 5 வருடங்களுக்கு பின்னர் தனிப்பட்ட பெயர்களுக்கு சாட்டப்படுகின்ற போதிலும் அந்த மோட்டார் சைக்கிள்களை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டமைக்கு | 2014/2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்தலின் கீழ் கள உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் / ஸ்கூட்டர்கள் 05 வருடங்களை கடந்த பின்னர் அவர்களுக்கே உரித்தினை கையளித்தல் தொடர்பிலான தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் | கள கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை அவர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு சாட்டப்பட்டுள்ள மையை சான்றுப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுப்படுத்தும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | BD/GPS/130/9/14/MC-8 ஆம் இலக்க மற்றும் 2019.11.22 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள பொது அறிவுரைக் கோவையின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஐந்து வருடங்களை கடந்த அந்த மோட்டார் சைக்கிள்களின் உரித்தினை கையளிப்பதற்கு இந்த திணைக்களத்தின் தலையீடு அவசியமற்றது என்பது அவதானிக்கப்படுகின்றது. | வேண்டியமை |
| (இ) | 2021 யூன் 11 ஆந் திகதி முதல் அமைச்சினால் 50 பிணியாளர் காவு வண்டிகள், 50 தண்ணீர் பவுசர்கள் மற்றும் 50 டபள் கெப் ரக வாகனங்கள் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை பிரமாணக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் 2021 யூன் 29 ஆந் திகதி அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 225 பிராடோ ரக வாகனங்கள் அந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்த பிராடோ ரக வாகனங்களை நிதிக் குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யும் போது 2 தண்ணீர் பவுசர்கள், 12 டபள் கெப் ரக வாகனங்கள் இலவசமாக வழங்குவதற்கு குறித்த விற்பனையாளர் இணங்கியிருந்தார்.<br><br>225 பிராடோ ரக வாகனங்களை அரசின் கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்ளாதிருக்குமாறு | | |

தீர்மானித்திருந்தமையால் குறித்த வாகனங்களின் விற்பனைக் கம்பனியினால் இலவசமாக வழங்குவதற்கு இணங்கியிருந்த 2 தண்ணீர் பவுசர்கள் மற்றும் 12 கெப் ரக வாகனங்களை வழங்குவதற்கு மறுத்திருந்தது. 2021 யூலை 28 ஆந் திகதி நிதியமைச்சினால் அவ்வாறு இலவசமாக வழங்குவதாக இணங்கி 2 தண்ணீர் பவுசர்களுக்கும், 12 டபள் கெப் ரக வாகனங்களும் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ள அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கிடைத்திருந்தது. வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது முதல் தீர்மானிக்கப்பட்டிருந்த 50 டபள் கெப் ரக வாகனங்கள் 50 பிணியாளர் காவு வண்டிகள் மற்றும் 50 தண்ணீர் பவுசர்களுக்காக பழைய விலைகளின் கீழ் நிதிக்குத்தகை தவணையின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் பெற்றுக் கொண்டிருந்தது. பின்னர் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த 02 பவுசர்களுக்கும் 12 டபள் கெப் ரக வாகனங்களையும் பெற்றுக் கொள்வதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 461,606 மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 யூன் 29 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் கெப் ரக வாகனமொன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 26,167 | 2021.08.17 ஆந் திகதிய 21/1526/304/894-II இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கெப் வாகனமொன்றின் மி.ர.கெ பெறுமதி ஐக்கிய | அத்தியாவசியமான பணிகளுக்காக மாத்திரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கு பெற்றுக் கொள்ள தீர்மானித்திருந்ததுடன் இலவசமாக வழங்குவதற்கு இணங்கியிருந்த கெப் ரக வாகனங்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ஒரு கெப் ரக வாகனத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 44,484 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ஒரு கெப் ரக வாகனமொன்றிற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 18,317 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மொத்தமாக கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை ஐக்கிய அமெரிக்க டொலர் 219,804 ஆகும். | அமெரிக்க டொலர் 29,055.74 ஆகும். (1,801,456/62=29,055.74) பிராடோ ரக வாகனங்கள் 225 இனை கொள்வனவு செய்தல் இரத்துச் செய்யப்பட்டதுடன் கழிவு இழக்கப்பட்டமை மற்றும் இலவசமாக வழங்குவதற்கு இணங்கி டபள் கெப் ரக வாகனங்களை கொள்வனவு செய்வதற்குரிய நாணயக் கடிதங்களின் சீராக்குவதன் பொருட்டு நாணயக் கடிதங்களை திருத்தியமைக்கும் இலகுத் தன்மைக்காக ஒரு நாணயக் கடிதத்தின் கொள்வனவு செய்யப்படும் அளவு மாத்திரமும் மற்றுமொரு நாணயக் கடிதத்தில் தெளிவுபடுத்தல் மாத்திரமும் திருத்தப்பட்டதுடன் ஏனைய நாணயக் கடிதங்கள் மாற்றியமைக்காது அவ்வாறு இருப்பதற்கு இடமளித்தமையின் அடிப்படையில் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளில் காண்பிக்கப்படும் விடயம் உண்மையாக அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட சம்பவம் அல்ல என்பது. | |
| (ii) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 11 கெப் ரக வாகனங்கள் அரச நிறுவனங்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்படாமையால் 2022.06.30 ஆந் திகதி வரையிலும் வரவு செலவுத் திட்ட திணைக்களத்தில் | அத்தியவசியமான கள கடமைகளுக்காக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய BD/GPS/13/01/01/2021 ஆம் இலக்க கோவைக்கமைய 2021.12.31 ஆந் திகதி வரையிலும் 184 டபள் கெப் ரக வாகனங்களுக்காக | அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அத்தியவசியமான முன்னுரிமையின் அடிப்படையில் வாகனங்கள் விடுவிக்கப் படுகின்றமையால் 2021.12.31 ஆந் திகதி வரையிலும் 11 கெப்ரக வாகனங்கள் எஞ்சியிருந்த போதிலும் அவற்றுள் 06 கெப் ரக வாகனங்கள் தற்போது அமைச்சு / திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 5 வாகனங்கள் அவ்வாறான வாகன தேவைப்பாடு நிலவும் கள கடமைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு திறைசேரி செயலாளரின் அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 2021 ஆம் ஆண்டில் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட குத்தகை வாகனங்களுக்கு உரிய நிறுவனங்களினால் பெற்றுக் கொண்டமையை சான்றுப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்களுக்காக அந்த நிறுவனங்களால் வாகனங்களை பெற்றுக் கொண்டவையை உறுதிப்படுத்தி கடிதங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டவாறு உள்ளது. | அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது வரவழைக்கப்பட்ட 164 வாகனங்கள் அரச நிறுவனங்களிடையே பகிர்ந்தளிக்கும் போது அந்த நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை கருத்தில் கொண்டு அவர்களின் அத்தியவசிய முன்னுரிமையான தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு வாகனங்களை வழங்குவதற்கு உத்தேசித்திருந்த போதிலும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் | அதிமேதகு சனாதிபதி, பிரதமர் மற்றும் சனாதிபதி செயலாளருடன் இடம்பெற்ற பல்வேறு கூட்டங்களில் கிடைத்த அறிவுரைகள் மற்றும் அதிமேதகு சனாதிபதியின் ‘‘கமசமக பிலிசந்தர’’ நிகழ்ச்சித் திட்டத்திற்காக திறைசேரியினை பிரதிநிதித்துப்படுத்தி பங்குபற்றியிருந்த இந்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த வாய்மொழி மூல அறிவுரைகள் மற்றும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட | அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்படாத 05 டபள் கெப் ரக வாகனங்கள் அந்த நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் பிரதேச சபைகளுக்கு 32 தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த பிரதேச சபைகளினால் தண்ணீர் பவுசர்களுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டிருந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | இணக்கப்பாடுகள் மற்றும் சனாதிபதி செயலகத்திலும் பிரதமர் அலுவலகத்திலும் இடம்பெற்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கூட்டங்களில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாய்மொழி மூலமான இணக்கப்பாடுகளின் மூலம் அமைச்சு திணைக்களங்களிலிருந்து கிடைத்த கோரிக்கைகளின் பிரகாரமும் வாகனங்களை பகிர்ந்தளித்தல் இடம்பெற்றது. அந்த ஒவ்வொரு நிறுவனங்களும் அவற்றை நிராகரிக்காது பெற்றுக் கொண்டுள்ளமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (உ) | மேற்கூறிய 1990 சுவசரிய மன்றத்திற்காக நிதிக் குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட 25 டொயோட்டா பிணியாளர் காவு வண்டிகளை பயன்படுத்துவதற்கு பொருத்தமான முறையில் மாற்றியமைப்பதற்காக ரூபா 25 மில்லியனான நிதியேற்பாடு தேவைப்படுவதாக வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வவ்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடு வழங்கப்படாமையின் அடிப்படையில் அந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் 2022 மே 25 ஆந் திகதி வரையிலும் இந்த பிணியாளர் காவு வண்டிகள் வழங்குனர் கம்பனிகளில் வாகன நிலையத்திலிருந்து அகற்றப்பட்டிராததுடன் அவை மிகவும் துரிதமாக அகற்றுமாறு சுவசரிய மன்றத்திற்கு | அரச நிறுவனங்களில் தேவைக்காக வாகனங்களை வரவழைத்தல் தொடர்பிலான 21/1440/304/094 ஆம் இலக்க 2021.06.28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் 21/1526/304/094-ii ஆம் இலக்க 2021.08.17 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வரவழைக்கப்பட்ட 50 பிணியாளர் காவு வண்டிகளில் 25 வண்டிகள் சுகாதார அமைச்சிற்கும் எஞ்சிய 25 வண்டிகள் சுவசரிய மன்றத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் TRS/V/Gen/II ஆம் இலக்க 2021.09.27 ஆந் திகதிய கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. சுவசரிய மன்றம் சுகாதார அமைச்சின் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் நிறுவனம் | தேவைக்கு பொருத்தமான வகையில் அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் வாகனங்கள் பெற்றுக் கொள்ளப் பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அத்தியவசியமானதும் உரிய அமைப்புக் குறிப்பீடுகள் தொடர்பில் போதிய தெளிவற்று 25 பிணியாளர் காவு வண்டிகளுக்காக ரூபா 103.38 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | என்பதால் சுவசரிய மன்றத்தின் கோரிக்கை இதற்கு அவசியமற்றது என்பதை அவதானிக்கின்றேன். | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சிரேஷ்ட மட்டத்திலான 6 பதவிகளும் இரண்டாம் நிலை மட்டத்திலான 9 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலான 2 பதவிகளுமாக மொத்தம் 17 பதவி வெற்றிடங்கள் நிலவின. | 2022.05.09 ஆந் திகதி வரையிலும் சிரேஷ்ட மட்டத்திலான 04 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்திலான 07 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 2022.04.19 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் மூன்றாம் நிலையிலான 04 பதவிகள் (02 சாரதிகள், 02 அலுவலக உதவியாளர்கள்) கீழிறக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அத்தியவசியமற்ற பதவியணி காணப்படின் பதவியணியை திருத்தி யமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |